# வீராச்சல ஶ்ரீராமசந்த்ர ஸுப்ரபாதம் 3








ஶ்ரீமதே ஶ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ 🙏
ஶ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நமஹ 🙏
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்
திருவடிகளே சரணம் 🙏

ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன் பூர்வாச்ரமத்தில் அருளிய பல ஸ்தோத்திர படைப்புகளில் சிலவற்றை ஸ்தோத்ராவளீ என்ற தொகுப்பாக வந்தது.
ஹைதராபாத்தில் ஸ்வாமி ஸம்ஸ்கிருத ஆசிரியராக அல்வால் என்ற இடத்தில் எழுந்தருளியிருந்த போது வீராச்சலத்தில் இருக்கும் சக்கரவர்த்தி திருமகன் ஸ்ரீராமனுக்கு ஸுப்ரபாதம் பாடி அருளினார். இது பலஸ்ருதியுடன் சேர்த்து 30 ஸ்தோத்திரங்கள் கொண்டது. நம் ஆசார்ய வள்ளலின் இப்படைப்பை அர்த்தத்துடன் ஒவ்வொன்றாக சேவித்து அனுக்கிரஹம் பெறுவோம்🙏

இன்று3வதுஸ்லோகம்
அனுபவிக்கலாம்🙏👇

வீராச்சல ஸ்ரீராமசந்த்ர ஸுப்ரபாதம் 3

ஹே அம்ப$^{3}$ ஸர்வ ஜக$^{3}$தாம் ஹிதமோத$^{3}$தா$^{3}$த்ரி
விஸ்வக்$^{3}$ விபோ$^{3}$த$^{4}$ ஹ்ருதயே
விபு$^{3}$தே4ந்த்ரவந்த்$^{3}$யே।
ப்ரப்$^{3}$வி ப்ரபோ$^{4}$ரநுமதே ப்ரகு$^{3}$ணைகதாநே
வீராத்$^{3}$ரிநாத$^{2}$த$^{3}$யிதே$^{3}$ தவ ஸுப்ரபா$^{4}$தம் ॥3॥

அர்த்தம் 👇
தாயே! உலகமனைத்துக்கும் நன்மையும் மகிழ்ச்சியும் கொடுப்பவளே, உலகமனைத்தையும் அறிந்தவரான எம்பெருமானுக்கு ஹ்ருதயம் போல உள்ளவளே, தேவர்களின் தலைவனான இந்திரனால் அல்லது நித்யஸூரிகளால் வணங்கப்படுபவளே, எல்லாச்சிறப்பும் செல்வமும் பெற்றவளே, உலகநாயகனுக்கு ஏற்றவளே, எல்லாக்கல்யாண குணங்களுக்கும் உறைவிடமானவளே, வீரசைலத்தில் எழுந்தருளியுள்ள சக்கரவர்த்தி திருமகனின் தர்மபத்னியே, உங்களுக்கு ஸுப்ரபாதத்தை ஸமர்ப்பிக்கிறோம்.

பதிவிறக்கம்
அடியேன் தாஸன் 🙏
சித்ரா அமுதன் 🙏
(Vadodara) 🙏